1972 ஆகஸ்ட் 19]

Tamil Nadu State Road Development and Traffic Planning Committee

* 117. Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Transport be pleased to state whether the Tamil Nadu State Road Development and Traffic Planning Committee has submitted any study Report to the Government?

தமிழ்நாடு மாநில சாலை மேம்பாடு போக்குவரத்துத் திட்ட குழு

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்நாடு மாநில சாலை மேம்பாடு போக்குவரத்துத் திட்டக் குழு ஆய்வு அறிக்கை எதனையும் அரசுக்குப் பணிந்தனுப்பியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை, ஐயா.

Passes for free travel for the Orthopaedically handicapped persons.

* 118 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) the number of orthopaedically handicapped persons, to whom passes for free travel in the State Transport buses were issued during 1971-72 in the Madras City; and

(b) whether the same facilities are being continued in the Pallava Transport Corporation?

உடல் ஊனமுற்றோருக்கு இலவச பயண அனுமதிச் சீட்டுகள்

திரு எம். ராஜா அய்யர்: மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை மாநகரில், தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய 1971-72 ஆம் ஆண்டில் உடல் ஊனமுற்றோர் எத்தனை பேருக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன ?